Registered as a NewsPaper

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்--IV

நாதம் -15 திருவள்ளுவர் ஆண்டு- 2035 புரட்டாதி-29 15-10-2004 வெள்ளிக்கிழமை ஓசை -240




## எல்லை கடந்த ஊடகவியலாளர் அமைப்பு புலிகள் பிரதிநிதிகள் பாரிசில் சந்திப்பு!

ஐரோப்பாவிற்கு விஜயம் செய்துள்ள தமிழீழ விடுதலைப் புலிகள் நேற்று பிரான்சிலுள்ள ஊடகவியலாளர்களுக்கான சர்வதேச அமைப்பான எல்லை கடந்த ஊடகவியலாளர்களின் அமைப்பு பிரதிநிதிகளையும், சட்டவல்லுனர்களையும் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

தலைநகர் பாரிசில் இடம்பெற்ற இச் சந்திப்பில் தமிழீழ காவல்துறைப்பொறுப்பாளர் ப.நடேசன் நீதிநிர்வாகத்துறைப் பொறுப்பாளர் பரா, மட்டு அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் ஆகியோர் கலந்துகொண்டனர். எல்லைகடந்த ஊடகவியலாளர் அமைப்பைச் சேர்ந்த ஆசிய பிரதிநிதிகள் பிரசல், சன்சுவா ஆகியோர் ஈழத்தமிழ் மக்களின் பிரச்சினைகள் பற்றியும் சமகால அரசியல் நிலவரங்கள் பற்றியும் கலந்துரையாடியுள்ளனர். இதன் பின்னர் பிரான்சின் சட்டவல்லுனர்களான பிக்குவா, மாட்டினோ ஆகிய இருவரையும் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர். பிரான்சின் சட்ட நடைமுறைகள் பற்றியும், பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர். இதன்போது தமிழீழ நீதிநிர்வாகத்துறைப் பொறுப்பாளர் பரா தமிழீழ சட்ட நகலை பிரான்ஸ் சட்டவல்லுனர்களிடம் கையளித்துள்ளார். இச் சந்திப்புக்களில் பிரான்சின் தமிழர் ஒருங்கிணைப்புக் குழு பொறுப்பாளர் பரிதியும் கலந்துகொண்டிருந்தார்.

## மட்டக்களப்பு சிறைச்சாலையில் இருந்த 10 போராளிகள் பிணையில் விடுதலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்புச் சிறைச்சாலையில் கடந்த ஒரு வருடத்திற்கு மேலாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 10 விடுதலைப்புலிப்போராளிகளும், கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்ற உத்தரவிற்கு அமைய நேற்றுப் பிற்பகல் மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்றத்தினால் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த வெள்ளி மற்றும் திங்கள் ஆகிய நாட்களில் இவர்களைப் பிணையில் செல்வதற்கான உத்தரவு மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் பிறப்பிக்கப்பட்ட போதிலும், அந்த உத்தரவு மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்றத்திற்கு வந்து சேருவதில் ஏற்பட்ட தாமதங்களினால் இவர்கள் பிணையில் செல்வதிலும் தாமதங்கள் எற்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது

. 08.07.2003 வாழைச்சேனையில் கைது செய்யப்பட்ட இருவர் மற்றும் 14.07.2003 கல்லடிப் பாலத்தில் கைது செய்யப்பட்ட 4 பெண்கள் உட்பட8பேர், பிணையில் விடுவிக்கப்பட்டவர்களாவார். 10 பேரையும் தலா 50 ஆயிரம் ரூபா ரொக்கம், தலா 50 ஆயிரம் ரூபா கொண்ட இருவரது சரீரப்பிணை ஆகியவற்றில் செல்ல அனுமதித்துள்ள மேன்முறையீட்டு நீதிமன்றம், வாழைச்சேனைப் பிரதேசத்தில் கைது செய்யப்பட்ட இருவரையும் மாதத்தில் கடைசி ஞாயிற்றுக்கிழமை, (ivஆம் பக்கம் பார்க்க)

# சந்திரிகா-காமன்வெல்த் பிரதிநிதிகளுடன் தேர்தல் முறை மாற்றம் குறித்து ஆராய்வு!

## வெஸ்ட்மினிஸ்டர் முறையில் ஆர்வம்

(கொழும்பு)

**சிறிலங்காவின் தேர்தல் முறையில் மாற்றம் கொண்டுவருவது குறித்துப் பிரித்தானிய காமன்வெல்த் பாராளுமன்ற சபைப் பிரதிநிதிகளுடன் சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஆலோசனை நடத்திவருகிறார்.**

சனாதிபதி மாளிகையில் இடம்பெற்ற இச்சந்திப்பில், சிறிலங்காவின் தற்போதைய அரசியலமைப்பு, தேர்தல் முறைமை, இன விகிதாசார வாக்களிப்புடன் இணைந்த வெஸ்ட் மினிஸ்டர் பாராளுமன்றத் தேர்தல் முறைமை, பாராளுமன்ற ஆட்சியமைப்பு போன்ற பல்வேறு அரசியல் யாப்பு மற்றும் அரசியல் இராஜாங்க விடயங்கள் குறித்தே பல மணிநேரம் ஆராயப்பட்டன.

சனாதிபதியின் பிரத்தியேக அழைப்பில் கொழும்பு வந்துள்ளதாகத் தெரிவித்துள்ள இக்குழுவினர், தற்போதைய அரசியலமைப்பை மாற்றியமைக்க எத்தகைய உதவிகளையும் ஆலோசனைகளையும் தாங்கள் வழங்க வேண்டுமென்று சனாதிபதி எதிர்பார்ப்பதாக அவரிடம் கேள்வியெழுப்பியதாகவும், இரகசியத் தகவல்கள் தெரிவிக்கின்றன. வெஸ்ட்மி னிஸ்டர் திட்டத்தை முழு (ivஆம் பக்கம் பார்க்க)

## அடையாளம் காட்டப்பட்ட மற்றுமொரு பொலிசார்!

(வடமராட்சி)

இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ். அலுவலக அதிகாரிகள் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் மேலு மொரு பொலிசார் அடையாளங் காணப்பட்டுள்ளார்.

நேற்று யாழ். நீதிமன்றில் நீதவான் இ.த.விக்கினராஜா முன்னிலையில் இடம்பெற்ற அடையாள அணிவகுப்பின் போதே இப் பொலிசார் அடையாளம் காட்டப்பட்டுள்ளார். தனித்தனியாக இடம் பெற்ற வெவ்வேறான அடையாள அணி வகுப்புகளின் போது, இணைப்பதிகாரி (ivஆம் பக்கம் பார்க்க)

## ரணில்-கருணாநிதி சந்தித்துப் பேச்சு

(கொழும்பு)

சிறிலங்காவின் எதிர்க்கட்சித் தலைவர் ரணில்விக்கிரமசிங்க திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் மு.கருணாநிதியை நேற்றுச் சந்தித்து உரையாடியுள்ளார்.

கலைஞர் கருணாநிதியின் இல்லத்தில் நேற்று நடைபெற்ற இந்தச் சந்திப்பின் போது, சேது சமுத்திரத்திட்டத்தை தான் வரவேற்பதாகவும் இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையே அனுமார்ப் பாலம் அமைக்கப்பட வேண்டும் எனவும் ரணில் தெரிவித்துள்ளார். இதேவேளை சிறிலங்காக் கடற்படையினரால் தமிழக மீனவர்கள் கைது செய்யப்படுவது குறித்து கருணாநிதி தமது கவலையைத் தெரிவித்துள்ளார்.

## மின்னல் தாக்கியதில் பெண்ணொருவர் காயம்

(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்பு சந்தைப்பகுதியில் நேற்றையதினம் மின்னல் தாக்கியதில் பெண்ணொருவர் காயமடைந்தார். இச்சம்பவம் பிற்பகல் 2.30மணியளவில் இடம் பெற்றது. புதுக்குடியிருப்பு கோம்பாவிலைச் சேர்ந்த ஜெனிற்றா(வயது-21) என்பவரே மின்னல்தாக்கியதில் பாதிப்புக்குள்ளானார்.

இவர் புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். (08)

## புலிகளுடனான பேச்சுக்களின் போதே மாற்றுயோசனை கையளிக்கப்படும்

### - அமைச்சரவைப் பேச்சாளர் மங்கள சமரவீர

(கொழும்பு)

விடுதலைப்புலிகள் முன்வைத்த இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை யோசனைக்கு எதிராக அரசு தயாரித்துள்ள மாற்றுயோசனை பற்றிய விபரம் பேச்சுவார்த்தை மேசையில் வைத்து விடுதலைப்புலிகளிடம் கையளிக்கப்பட்ட பின்னரே மக்களுக்கு அதுபற்றி விளக்கப்படுமென ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

அமைச்சரவைப் பேச்சாளரும் ஊடகத்துறை அமைச்சருமான இவர் அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் மாநாட்டிலேயே இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில், (ivஆம் பக்கம் பார்க்க)

## சிங்கள ஊர்காவல் படையினர் விடயத்தில் ஜே.வி.பி. அரசியல் லாபம் தேட முயற்சி

### - சிங்கள அமைப்பின் பிரதிநிதி கருத்து

விடுதலைப்புலிகளால் கைதான ஊர்காவல் படையினர் நாளையோ அல்லது ஒருசில தினங்களிலோ விடுவிக்கப்படும் நிலையில் ஜே..வி.பி.அரசியல் லாபம் தேடும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதாக வடக்கு கிழக்கு சிங்கள அமைப்பின் பிரதிநிதி சுனில் அழுத்கமகே தெரிவித்துள்ளார். கிழக்கு மக்கள் சங்கம் என்ற பெயரில் ஜே.வி.பி. நேற்று முற்பகல் ஏற்பாடு செய்த ஆர்ப்பாட்டம் தொடர்பிலேயே இந்தக் கருத்தை அவர் வெளியிட்டார். இதேவேளை ஊர்காவல் படையினரை விடுவிக்குமாறு கடந்த பல வாரங்களாக உண்ணாவிரதம் இருக்கும் உண்ணாவிரதிகளில் ஒருவர் கருத்து வெளியிடுகையில் தாம் தமது உறவினரை விடுவிக்கப் பல நாட்களாக (ivஆம் பக்கம் பார்க்க)

## இனந்தெரியாதோரால் தாக்கப்பட்ட மீனவர் குறித்துத் தகவல்லில்லை

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்கின் மணற்காட்டுப் பகுதியில் நேற்று முன்தினம் புதன்கிழமை அதிகாலை மீனவர்கள் மீது நடாத்தப்பட்ட தாக்குதலையடுத்து காணாமற் போயிருந்த சவரிமுத்து நோவேட் (வயது 38) என்பவரைத் தேடும் முயற்சிகள் நேற்று முழுவதும் தொடர்ந்த போதும் அது வெற்றி பெற்றிருக்கவில்லை.

அப்பகுதி மீனவ சங்கங்களின் ஏற்பாட்டில் மீன்பிடிப்படகுகள் காணாமற் போன மீனவரைத் தேடும் பணியில் நேற்று (ivஆம் பக்கம் பார்க்க)

## சிறிலங்கா இராணுவத் தளபதி வவுனியா, மன்னாருக்கு விஜயம்

சிறிலங்கா இராணுவத்தளபதி சாந்த கொட்டேகொட வவுனியாவுக்கான விஜயம் ஒன்றினை நேற்று மேற்கொண்டார்.

வன்னி இராணுவ தலைமையகத்தில் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலில் வன்னி இராணுவத்தளபதி பாரமிகுலதுங்க தலைமையிலான குழுவினர் கலந்து கொண்டனர். தற்போது வன்னியின் நிலவரம் தொடர்பாகவும், பாதுகாப்பு நிலைமைகள் தொடர்பாகவும் ஆராயப் பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வவுனியாவிற்கான விஜயத்தை முடித்துக கொண்டு அவர் மன்னாருக்குச் சென்றார். (ivஆம் பக்கம் பார்க்க)

## இன்று மரநடுகை தினம்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்ட பொருண்மிய மதியுரையகத்தினரால் இன்று சர்வதேச மரநடுகை தினம் (ஒக்ரோபர் 15) கொண்டாடப்படவுள்ளது.

இன்று பகல் 10.00 மணிக்கு கலை பண்பாட்டு மண்டப வளாகத்தில் மேற்படி மரநடுகை தின நிகழ்வுகள் இடம்பெறவுள்ளதெனவும் அனைவரையும் கலந்து இன்றைய மரநடுகைதின நிகழ்வினைச் சிறப்பிக்கும் வண்ணம் கிளி.மாவட்ட பொருண்மிய மதியுரையகத்தினர் வேண்டியுள்ளனர். (சேர)

## ஐந்து இலட்சம் மக்களுக்கு கண்ணிவெடிகளால் அச்சுறுத்தல்

### ஐ.நா.அறிக்கையில் தகவல்

கண்ணிவெடி அகற்றும் பிரிவு அண்மையில் வெளியிட்டுள்ள தகவலொன்றில் வடக்குக் கிழக்கிலுள்ள 450 கிராமங்களில் வாழும் சுமார் 5 இலட்சம் மக்கள் தொடர்ந்தும் கண்ணிவெடி அச்சுறுத்தலை எதிர் நோக்குவதாகக் கவலை வெளியிட்டுள்ளது. எதிர்வரும் நவம்பர் மாதம் நைரோபியில் நடைபெறவிருக்கும் "கண்ணிவெடியற்ற உலகம்" என்ற மகாநாட்டில் இது பற்றிய அறி க்கையொன்று சமர்ப்பிக் கப்படவிருப்பதாகவும் அந்த அமைப்புக் கூறுகின்றது.

## இனியவாழ்வு இல்லத்திற்கு ரூ.ஒரு இலட்சம் அன்பளிப்பு

(கண்டாவளை)

யாழ்ப்பாணம் விநாயகர் வீதி மயிலிட்டியிலிருந்து புலம்பெயர்ந்து தற்போது லண்டனில் வசித்துவரும் சி.இராசசுந்தரம் என்பவர் கடந்த வெள்ளியன்று வள்ளிபுனத்தில் இயங்கும் இனியவாழ்வு இல்லத்திலுள்ள செவிப்புலனற்றோர், கண்பார்வையற்றோர்களின் நலனுக்காக ஒரு லட்சம் ரூபா பணத்தை இனியவாழ்வு இல்ல பொறுப்பாளரிடம் அன்பளிப்பாக வழங்கியுள்ளார். இதேவேளை தர்மபுரம் ம.வி. அருகில் இயங்கும் தாய்,சேய் போசாக்கு நிலையத்தில் பராமரிக்கப்பட்டுவரும் கர்ப்பிணிகள், சிறுவர்களுக்காக பத்தாயிரம் ரூபாபணம் தாய்சேய் நிலையப்பொறுப்பாளர் வர்ணாவிடம் அன்பளிப்பாக வழங்கியுள்ளார். (14)

## யோகர் சுவாமிகள் திருவடி நிலைய ஏழாம் ஆண்டு நிறைவு நிகழ்வு

யோகர் சுவாமிகள் திருவடி நிலைய 7ஆம் ஆண்டு நிறைவு விழா நாளை நடைபெற ஏற்பாடாகியுள்ளது. முதியோர் இல்ல ஸ்தாபகர் கந்தசாமி மற்றும் நாட்டுப்பற்றாளர் பொன்விநாயகமூர்த்தி ஆகியோர் நினைவு கூறப்படுவதுடன்,முதியோர் தினக் கொண்டாட்டமும் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

வன்னேரிக்குளம் ஐயனார்புரம் யோகர் சுவாமிகள் திருவடி நிலைய முதியோர் இல்லத்தில் இல்லத்தலைவர் பொன்நித்தியானந்தன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் முதன்மை விருந்தினராக கிளிநொச்சி மாவட்டஅரசஅதிபர் தி.இராசநாயகம் மற்றும் சிறப்பு விருந்தினர்கள் கலந்து முதியோரைக் கௌரவிக்க வுள்ளனர்.

அத்துடன் நினைவுரைகள் மற்றும் புத்தக வெளியீடு கலை நிகழ்வுகள் என்பன இடம்பெறவுள்ளமைகுறிப்பிடத்தக்கது. (சோ.கு)

## சமாச தலைவர்தெரிவு

கடற்றொழில் சங்கப் பிரதிநிதி கள் சந்திப்புக் கூட்டத்தில் பள்ளிக்குடா கடற்றொழில் சங்கத் தலைவர் யோ.பிரான்சிஸ் ஏக மனதாக சமாசத் தலைவராக தெரிவு செய்யப்பட்டுள்ளார். இதன் துணைத்தலைவராக சூசை நாதனும் தெரிவு செய்யப்பட்டார். (34)

## இந்திய மீனவர்களிடமிருந்து மீட்கப்பட்ட வெடிபொருட்கள் கொழும்பில் பகுப்பாய்வு

(யாழ்ப்பாணம்)

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு காங்கேசன்துறைக் கடற்பரப்பில் இந்திய மீனவர்களது இழுவைப்படகுகளில் கைப்பற்றப்பட்ட வெடிபொருட்களின் மாதிரிகளை இரசாயனப் பகுப்பாய்விற்கு உட்படுத்த மல்லாகம் நீதவான் திருமதி சரோஜினி இளங்கோவன் பொலிசாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட 10 இந்திய மீனவர்களும் அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட வெடிபொருட்களும் மல்லாகம் நீதிமன்றில் நேற்று முன்தினம் ஆஜர் செய்யப்பட்டிருந்தன. சுமார் 25 பொதிகளில் அடைக்கப்பட்டிருந்த இவ் வெடி பொருட்களின் மாதிரியைக் கொழும்பில் உள்ள இரசாயனப் பகுப்பாய்வுத் திணைக்களத்திற்கு பகுப்பாய்விற்கு உட்படுத்துவதற்காக அனுப்பிவைக்க காங்கேசன்துறைப் பொலிசாரிற்கு நீதவான் உத்தரவிட்டுள்ளார். பிடிக்கப்பட்ட படகு மற்றும் எஞ்சிய வெடிபொருட்களை பாதுகாப்புக் கருதி காங்கேசன்துறை மற்றும் பலாலி படைத்தளங்களில் தடுத்து வைப்பதற்கான அனுமதியையும் அவர் வழங்கியுள்ளார்.

இதனிடையே மல்லாகம் மாவட்ட நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட 10 இந்திய மீனவர்களையும் எதிர்வரும் 22ஆம் திகதி வரை தொடர்ந்தும் யாழ்.சிறைச் சாலையில் தடுத்து வைக்கவும் உத்தரவிட்டுள்ளார்.

மறுபுறத்தே கொழும்பிலிருந்து வருகை தந்துள்ள விசேட குற்றப் புலனாய்வுப் பிரிவுப் பொலிஸ் குழு, யாழ். சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்களிடம் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (27,33)

## 4ஆம் ஆண்டு நினைவுகள்



தாயின் மடியில் 23 . 07 . 1979 — தாயக மண்ணில் 15 . 10 . 2000

### 2 ஆம் லெப். மாறன்

(இரத்தினராசா செல்வகுமார்)

எம் தாய் மடியில் பிறந்தவனே
தரணிகாக்க புலியாக எழுந்தவனே
ஈழமண் வெற்றி கண்டிட
போரினில் கனல் சுமந்தவனே
உயிருள்ள காலம் வரை உன்னினைவுகள் மாறுமா
உனையிழந்த துயரமும் உன்வீரத்தால் மறைந்ததையா
விடிகின்ற மண்மீது விழுதாக வந்துவிடு
வருகின்ற தமிழீழம் வந்துன்னைத் தாலாட்டும்.

உன்பிரிவால் துயருறும்
தாயார், சகோதரர்கள்,
சகோதரிகள்,
பெறாமக்கள், மருமக்கள்,
மைத்துனர், உறவினர்கள்,
போராளிகள், மற்றும்
உற்றார்.

தகவல்:–
இரா. சிவகுமார்.
ஸ்ரீஹனுமன்வாசா.
இல 23/2
தொட்டியடி. விசுவமடு. (5179)


## ஆளுக்கொரு மரம் நாட்டி சுற்றுச் சூழலைப் பாதுகாக்க முன்வாரீர்

## தேசிய மரநடுகை தினம்

Oct-15-2004

### அழைப்பிதழ்

UNDPநிதியுதவியுடன் பொருண்மிய மதியுரையகம் (TECH) இணைந்து நடை முறைப்படுத்தும் மரநடுகைத்திட்ட அங்குரார்ப்பண நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்பிக்கும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

காலம்: 15.10.2004
இடமும் நேரமும்: யாழ்ப்பணத்தில்
விவசாயபீடம் யாழ். பல்கலைக்கழகம் — மு.ப 9.00
கிளிநொச்சியில்
கலை பண்பாட்டு மண்டபம் — மு.ப.10.00
முல்லைத்தீவில்
ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயம். — மு.ப.11.00
மன்னாரில்
அடம்பன் றோ. க. த. பாடசாலை — மு.ப.11.30

உங்கள் குழந்தைகளின் எதிர்கால வாழ்வு நன்றாக அமைய, நல்ல சுற்றுச் சூழலினை அவர்களுக்கென அமைத்துக் கொடுக்க வேண்டியது உங்கள் கடமை அல்லவா?

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித்திட்டம்,
(UNDP)கிளிநொச்சி.

(5185)

பொருண்மிய மதியுரையகம் (TECH),
இரணைமடுச் சந்தி, கிளிநொச்சி.

# மீள்குடியமர்ந்தோர் நெற்செய்கை மேற்கொள்ள திருமலையில் சிறிலங்கா படையினர் தடை!

## பிரதேச செயலருக்கு மக்கள் முறையீடு

(திருமலை)

**திருகோணமலை-கண்டிவீதியில் பாலம் போட்டாறு பத்தினிபுரம் கிராமத்தில் மீளக்குடியமர்ந்துள்ள தமிழ்க் குடும்பங்கள் தங்களுக்கு வழங்கப்பட்ட விவசாய நிலத்தில் நெற்செய்கையை எதிர்வரும் கால போகத்தில் மேற்கொள்வதற்கு சிறிலங்கா இராணுவம் தடை விதித்திருப்பதாக தம்பலகாமம் பிரதேச செயலாளருக்கு முறையிட்டுள்ளது.**

தம்பலகாமம் பிரிவில் பாலம் போட்டாறு பகுதியில் இராணுவத்தினரின் முகாம் அமைந்துள்ளது. பத்தினிபுரம் கிரமத்திலிருந்து இடம்பெயர்ந்த தமிழ்க் குடும்பங்கள் தற்போது யுத்தநிறுத்த உடன்படிக்கை அமுலுக்கு வந்த பின்னர் மீளக்குடியமர்ந்து வருகின்றனர். ஒவ்வொரு குடும்பத்திற்கும் தலா 2ஏக்கர் வயல் நிலம் வழங்கப்பட்டுள்ளது. மீளக்குடியமர்ந்த குடும்பங்கள் வசிப்பதற்காக தமிழர் புனர்வாழ்வுக்கழகம் வீடுகளைக் கட்டிக்கொடுத்துள்ளது.

காலபோக நெற்செய்கையை மேற்கொள்வதற்காக தங்கள் வயல் நிலங்களை உழுவதற்கான பூர்வாங்க வேலைகளை மேற்கொள்வதற்கு இக்குடும்பங்கள் முயற்சிகள் மேகொண்டன. அங்கு நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் வயல் நிலங்கள் உழுவதைத் தடைசெய்துவிட்டனர். இது தொடர்பாக சம்பந்தப்பட்ட கிராம சேவையாளரின் சிபார்சுடன் தம்பலகாமம் பிரதேச செயலாளர் வழங்கிய கடிதத்தையும் படையினர் உதாசீனம் செய்துவிட்டதாகவும், மீளக்குடியமர்ந்த தமிழ்க் குடும்பங்கள் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் தம்பலகாமம் பிரதேசப் பொறுப்பாளருக்குக் கடிதமூலம் அறிவித்துள்ளன.

## சோலர் திருட்டு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு செம்மலை மாணிக்கவினாயகர் ஆலயத்தில் பொருத்தப்பட்டிருந்த சோலர் களவாடப்பட்டுள்ளது.

இச்சோலர் அக்கிராமத்தின் நலன்விரும்பி ஒருவரால் இவ்வாலயத்திற்கு அன்பளிப்புச் செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது. (20)

-பாண்டியன்குளம், துணுக்காயில்-

## கால்நடை இறைச்சி, பால் விற்பனைக்கான தடைநீக்கம்

(மல்லாவி)

பாண்டியன் குளம், துணுக்காய்ப் பிரதேசங்களில் கால்நடைகளை உணவுக்குப் பாவித்தல் மற்றும் பால் என்பவற்றுக்கு விதிக்கப்பட்டிருந்த தடை நீக்கப்பட்டுள்ளது. அண்மைக்காலமாக வன்னியில் பெரும்பகுதிப் பிரதேசங்களில் கால்நடைகளுக்கு கால்வாய்நோய் அறிகுறிகள் காணப்பட்டு வந்தமையால் பாண்டியன்குளம் துணுக்காய்ப் பிரதேசங்களிலும் இவற்றை மனித உணவுக்குப்பயன்படுத்தப்படுவது தடைசெய்யப்பட்டிருந்தது. தற்போது கால்நடைகளில் காணப்பட்டுவந்த கால்வாய் நோய் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டதாக கால்நடை வைத்திய அதிகாரிகளும் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரும் பரிசோதித்து உறுதி செய்த பின்னர் இதற்கான தடை இப்போது நீக்கப்பட்டுள்ளது. இதனால் இவ்வளவு நாளும் தடைசெய்யப்பட்டிருந்த பால் சேகரிப்பு, விற்பனவு என்பனவும் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளது (24)

## கிளிநொச்சி தொழில்நுட்பக் கல்லூரியில் அலுமினிய பொருள் உற்பத்திப் பயிற்சிநெறி

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி தொழில்நுட்பக் கல்லூரியில் முதன்முதலாக அலுமினியப் பொருள் உற்பத்திப் பயிற்சி நெறி நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்ட நிகொட் திட்டத்தின் நிதியுதவியுடன் கனேடிய பல்கலைக்கழகத்தின் அனுசரணையுடன் கிளிநொச்சி தொழில் நுட்பக் கல்லூரியில் ஆரம்பித்து வைக்கப்பட்ட மேற்படி பயிற்சிநெறியின் ஆரம்ப நிகழ்வு கல்லூரி முதல்வர் பிரபாகரன் தலைமையில் இடம் பெற்றது. காலை 10.00 மணிக்குப் பொதுச்சுடரினை நிகொட நிறுவனப் பிரதித் திட்டப் பணிப்பாளர் பார்த்தீபன், அரச சார்பற்ற நிறுவனங்களின் நிர்வாக உத்தியோகத்தர் சுப்பிரமணியம், உலக கனேடிய பல்கலைக்கழகத்தின் கிளி, முல்லை மாவட்ட இணைப்பாளர் சத்தியசீலன் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

அடுத்து தமிழீழ தேசியக்கொடியினை கிளிநொச்சி மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் செயலாளர் மாணிக்கம் ஏற்றி வைக்க, நிறுவனக் கொடியினை கிளி.வலயக் கல்விப்பணிப்பாளர் ப.அரியரத்தினம் ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து வலயக்கல்விப் பணிப்பாளர், நிகொட்திட்டப் பணிப்பாளர், பொருண்மிய மதியுரையகத்தின் கணக்காளர் நேசன் ஆகியோர் கருத்துரை வழங்கினார்கள்.

மேற்படி அலுமினியப் பொருள் உற்பத்திப் பயிற்சி நெறியானது மாவட்டத்தின் தேவையினைக் கருத்திற் கொண்டு வன்னிப் பெருநிலப்பரப்பில் பொருத்தமான ஒரு பயிற்சி நெறியாக இதனை ஆரம்பித்துவைத்துள்ளனர். இப் பயிற்சி ஆறு மாதகாலம் கொண்ட ஒரு முழுமையான பயிற்சிநெறி என்பதும் ஆரம்பப் பயிற்சி நெறியில் இருபதிற்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்துகொண்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். (சோ,கு)

## மன்னார் மாவட்ட தொழிலாளர் ஒன்றியம் அங்குரார்ப்பணம்

(மன்னார்)

மன்னார் மாவட்ட தொழிலாளரின் ஒன்றிய அங்குரார்ப்பணக் கூட்டம் அண்மையில் மன்னார் நகர மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வு மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியத்தின் செயலாளரின் தலைமையில் இடம்பெற்றது. இக் கூட்டத்தில் தொழில் ஒன்றியங்களுக்குப் பொறுப்பான ஈழப்பிரியன் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

இக் கூட்டத்தில் புதிய தலைவராக சற்குணராஜாவும், செயலாளராக இரட்ணசிங்கமும் தெரிவு செய்யப்பட்டனர். அத்துடன் 27 பேரை உள்ளடக்கிய செயற்குழுவும் அமைக்கப்பட்டது. • (மி)

## புகையிரதம் மோதி இரு யானைகள் பலி!

(செட்டிகுளம்)

வவுனியா பூனாவைப் பகுதியில் இரண்டு யானைகள் புகையிரதத்துடன் மோதுண்டு மரணமாகியுள்ளன. கடந்த செவ்வாய் இரவு கொழும்பில் இருந்து வந்த புகையிரதத்துடன் மோதுண்டே இந்தச் சோடி யானை இறந்திருப்பதாக வவுனியாப் பொலிசார் தெரிவிக்கின்றனர்.

அப்பகுதிக்குச் சென்ற வனவளத்துறையினரும், பொலிசாரும் நேற்றுமுன்தினம் யானையினை அகற்றினர்.

இப்பகுதியில் ஏற்கனவே ஒருமுறை இவ்வாறு இடம்பெற்றதாகத் தெரிவிக்கப் படுகிறது. இதில் ஒன்று ஆண் யானை என்றும் மற்றது பெண் யானை என்றும் தெரிவிக்கப்படுகிறது. (21)

## தேசிய மட்டத்தில் முதலிடம்



(அலுவலக செய்தியாளர்)

கொழும்பில் நடைபெற்ற தேசிய மட்டத் தமிழ் மொழி கலைத்திறன் போட்டியில் பாவோதல் பிரிவு ஐந்தில் போட்டியிட்ட சண்முகநாதன் ஜெயந் திரன் முதலாமிடத்தைப் பெற்றுப் பாடசாலைக் கும், வலயத்திற்கும் பெருமை சேர்த்துள்ளார்.

இவர் துணுக்காய் வலய யோகபுரம் மாவித்தியாலயத்தைச் சேர்ந்த மாணவன் என்பது குறிப்பிடத்தக்கது. (சோ.கு)

## சிறுவர் போசாக்கை மேம்படுத்த ஞானிமடம் கிராமத்தில் கருத்தமர்வு

சிறுவரின் போசாக்கை மேம்படுத்துவதற்காக பூநகரி அபிவிருத்திப் புனர்வாழ்வுக்கழக அனுசரணையுடன் உலக தர்சன நிறுவனம் விலங்குப் பராமரிப்புத் தொடர்பான செயலமர்வு ஒன்றை ஞானிமடம் கிராமத்தில் நேற்று நடத்தியது. இக்கருத்தரங்கிற்கு சமூக பொருளாதார அபிவிருத்திக் குழுத்தலைவர் செ.பாஸ்கரலிங்கம் தலைமை தாங்கினார். கருத்துரையை உலக தர்சன போசாக்கு இணைப்பாளர் பிறேம் வழங்கினார்.

அத்துடன் கால்நடை வளர்ப்புத் தொடர்பாக பூநகரி கால்நடை வைத்தியர் விரிவாகவும், விளக்கமாகவும் கருத்துரை வழங்கினார்.

இச்செயலமர்வில் 50 பேர் கலந்து கொண்டதுடன் முதற்கட்டமாக 25 பேரில் ஒவ்வொருவருக்கு ஐந்து ஆடு அல்லது 7 கோழி அல்லது 2 மாடு என்பன வழங்கப்பட்டன. (34)

- சென்னை டெஸ்ட் -

## அவுஸ்திரேலிய 235 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது

(சென்னை)

இந்திய-அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் முதல் இனிங்சில் அவுஸ்திரேலியா சகல விக்கெட்டுக்களையும் இழந்து 235 ஓட்டங்களைப் பெற்றது.

நேற்றுச் சென்னையில் சேப்பாக்கம் மைதானத்தில் ஆரம்பமாகிய இவ் டெஸ்ட் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற அவுஸ்திரேலிய அணித்தலைவர் கில்கிறிஸ்ட் துடுப்பாட முடிவு செய்தார்.

இதன்பிரகாரம் களமிறங்கிய அவுஸ் அணியின் ஆரம்பத்தில் துடுப்பாட்ட வீரர்கள் விக்கெட் இழப்பின்றி 135 ஓட்டங்கள் வரை பெற்று மிகவும் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடி வலுவான அடித்தளத்தை இட்டனர். ஆயினும், அனில் கும்பிளேயின் அபார பந்து வீச்சினால் (7/48) அவுஸ். அணி 235 ஓட்டங்களுக்குள் தனது சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. ஹர்பஜன்சிங் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி ஆட்டநேர இறுதியில் 28/. என்ற நிலையில் இருந்து யுவராஜ்சிங் சொந்த எண்ணிக்கையாக எட்டு ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலை சேன்வோர்ன் பந்து வீச்சில் ஆட்டம் இழந்தார்.

இவ்விக்கெட்டின் மூலம் முரளிதரனின் உலக சாதனையைச் சேன் வோர்ன் சமன் செய்துள்ளார்.

## வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி போட நடவடிக்கை

பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் எல்லைகளுக்கு உட்பட்ட வளர்ப்பு நாய்களுக்குத் தடுப்பூசி போடப்படும் திகதியும், நேரமும் அறிவிக்கப்பட்டுள்ளது. இன்று 09.00.10.00 தம்பகமம் சனசமூகநிலையம், 10.00-11.00 வளர்பிறை சனசமூக நிலையம், 11.30-01.30 முல்லையடி வண்ணாங்கேணி முன்பள்ளி, கிராம அபிவிருத்திச் சங்கம், 01.30-03.00 தர்மக்கேணி சனசமூகநிலையம் நாளை 09.00-10.00 சோரன்பற்று திருவள்ளுவர் சனசமூக நிலையம், 10.30-11.30 முருகந்தநகர் வளர்மதி ச.ச.நிலையம் மாசார். விஷ்ணு ச.ச.நிலையம் 11.30.-01.00 முகாவில் பாரதி சனசமூக நிலையம்,01.00-03.00 இயக்கச்சி, கோவில் வயல் கண்ணன் சனசமூக நிலையம், கோவில் வயல் கி.உ.பணிமனை. கிடைக்கப்பெற்ற இந்தச் சந்தர்ப்பத்தை நாய் வளர்ப்போர் பயன்படுத்திக்கொள்ளுமாறு கோரப்படுகிறது. (11)

பாக்டெல் ஒரு நாள் தொடர்

## இரண்டாவது ஆட்டத்திலும் பாக்.கிடம் சிறிலங்கா தோல்வி

பாகிஸ்தானில் நடைபெற்றுவரும் பாக்டெல் முக்கோணக் கிரிக்கெட் தொடரில் நேற்று பாக் அணி சிறிலங்கா அணியை ஆறு விக்கெட்டுக்களால் வெற்றியீட்டியது. இது சிறிலங்காவிற்கு பாகிஸ்தானிடம் கிடைத்த இரண்டாவது தோல்வியாகும்.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பாக் அணி களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது. 50 ஓவர் முடிவில் சிறிலங்கா அணி 293/6 ஓட்டங்களைப்பெற்றது. அணித் தலைவர் மாவன் அத்தப்பத்து 111 ஓட்டங்களையும், சங்கக்கார69 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் நவீட் இரு விக்கெட்டுக்களையும், சமி,ரசாக் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய பாக்.அணி 48.5 ஓவரில் நான்கு விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து வெற்றியிலக்கை எட்டியது. அணித்தலைவர் இன்சமாம் உல்ஹக் 58 பந்துகளில் ஆட்டமிழக்காது 76 ஓட்டங்களையும், பட் 57 ஓட்டங்களையும், மலிக் 56 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் சமிந்தவாஸ் இரு விக்கெட்டுக்களையும், உபுள் சந்தன, டில்காரபெர்ணான்டோ தலா ஒரு விக்கெட்டுகளையும் கைப்பற்றினர். ஆட்டநாயகனாக அத்தப்பத்து தெரிவானார்.

இத் தொடரின் இறுதியாட்டம் நாளை (சனி) பாக்-சிறிலங்கா அணிகளுக்கிடையே நடைபெறும்.

# தமிழர் ஆசிரியர் சங்கக் கோரிக்கைகளை பரிசீலனைசெய்ய விசேட செயலணிக் குழு

## -கல்வியமைச்சின் செயலர் நேற்றைய சந்திப்பில் தெரிவிப்பு

தமிழ்மொழி மூலக்கல்வி அபிவிருத்திக்கான அலுவல்களைக் கவனிப்பதற்காக மத்திய கல்வியமைச்சில் தனிப்பிரிவு ஒன்று இன்னும்ஒருமாதத்தில் செயற்பட ஆரம்பிக்குமென்று கல்வியமைச்சின் செயலாளர் டாக்டர் தாராடிமெல் நேற்று வியாழக்கிழமை இலங்கைத்தமிழர் ஆசிரியர் சங்கத் தூதுக்குழுவிற்கு உறுதியளித்தார். இச்சந்திப்பு கல்வியமைச்சில் வியாழன் காலை 10.30மணியளவில் ஆரம்பமாகி நண்பகல் வரை நீடித்தது.

தமிழ்மொழி மூலக்கல்விப்பிரிவு ஆரம்பிக்கப்படும் வரை இலங்கைத தமிழர் ஆசிரியர் சங்கம் விடுத்துள்ள அவசர கோரிக்கைகள் மற்றும் தேவைகள் பற்றி உடனடி நடவடிக்கை எடுப்பதற்கென்று விசேட செயலணிக்குழு ஒன்றை நியமிப்பதாகக்கூறிய டாக்டர் தாராடிமெல் அச்செயலணிக்குழுவில் இடம் பெறும் உறுப்பினர்களின் பெயர்களையும் வெளியிட்டார்.

பிரதிக்கல்விப் பணிப்பாளர் நாயகம் திருமதி.சிறிவர்த்தனா, நிர்வாகப்பிரிவு பணிப்பாளர் விக்கிரமநாயகா, கல்விப்பணிப்பாளர்களான குணவர்த்தனா, கச்சி முகமது ஆகியோர் இவ்விசேட செயலணியில் இடம்பெறுகின்றனர்.

"தமிழ்மொழி மூலக்கல்வி தொடர்பாக அதிபர்கள், ஆசிரியர்கள் கல்விசாரா ஊழியர்களுக்கு நிறையப்பிரச்சினைகள் இருப்பதை வடக்குக் கிழக்கில் தமிழ்மொழி மூலம் ஆசிரியர்களுக்குப் பற்றாக்குறை இருப்பதையும் நான் ஏற்றுக்கொள் கின்றேன். விரைவில் இவற்றைத் தீர்ப்பதற்காக அமைச்சில் தமிழ் மொழி மூலக்கல்வி அபிவிருத்திப் பிரிவொன்றை நிறுவத் திட்டமிட்டுள்ளேன். இன்னுமொரு மாதத்தில் இத் தனிப்பிரிவு செயற்படும்." என்று செயலாளர் தாராடிமெல் சந்திப்பின் ஆரம்பத்தில் தெரிவித்தார்.

தமிழ்மொழி பாடநூல்களில் இலங்கை தமிழரின் வரலாறு பற்றித் திரித்தெ . மூதப்பட்டிருப்பது பற்றி தமிழர் ஆசிரியர் சங்கத் தூதுக்குழு சுட்டிக்காட்டியபோது, இதுபற்றி உடனடி நடவடிக்கை எடுக்கும் படி தேசிய கல்வி நிறுவகத்திற்கும், கல்வி வெளியீட்டுத் திணைக்களத்திற்கும் அந்த இடத்தில் வைத்து டாக்டர். தாராடிமெல் உத்தரவிட்டார்.

நிரந்தர நியமனம் வழங்கப்படாதிருக்கும் வடக்கு-கிழக்கைச் சேர்ந்த சுமார் 160 தொண்டர் ஆசிரியர்களுக்கும் நிரந்தர நியமனம் வழங்கப்படுவது தொடர்பாக வடக்குக் கிழக்கு மாகாணக் கல்வியமைச்சிடம் இருந்து, விபரங்களைப் பெற்று பொதுச்சேவை ஆணைக்குழுவின் கவனத்திற்கு கொண்டு வந்து, ஆவன செய்ய நடவடிக்கை எடுப்பதாக டாக்டர்.தாராடிமெல் தெரிவித்தார்.

பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவது குறித்து அமைச்சரவை அங்கீகாரத்தைப்பெற நடவடிக்கை எடுக்கப்படும் என்று டாக்டர்.தாராடிமெல் தெரிவித்தார். தற்போது அமைக்கப்பட்டுள்ள விசேடசெயலணி இது தொடர்பாக கவனம் செலுத்தும் என்றும் அவர் கூறினார். (25)

# முரண்பாடுகளைத் தீர்க்க ஹெல உறுமய பௌத்த பீடாதிபதிகளை நாடுகிறது

ஜாதிக ஹெல உறுமய கட்சிக்குள் எழுந்துள்ள முரண்பாடுகளை கையாள மல்வத்தை மற்றும் அஸ்கிரிய பீடாதிபதிகளைச் சந்தித்து அக்கட்சியின் பொதுச் செயலாளர் வண.உடுவ தம்மலோகதேரர் ஆலோசனை நடாத்தியுள்ளார்.

ஜாதிக ஹெல உறுமயக் கட்சியின் ஸ்தாபகரும் தலைவருமான திலக் கருணரட்ன அக்கட்சியை விட்டு வெளியேறி, ஐ.தே.மு.யுடன் இணைந்ததையடுத்து கட்சிக்குள் குழப்பங்கள் ஆரம்பித்தன. கட்சி உறுப்பினர்கள் சிலரின் முடிவின்படி கட்சியின் செயலாளர் சம்பிக்க ரணவக்க அப்பதவியிலிருந்து நீக்கப்பட்டதும், வண.சுமங்கல தேரர் கட்சியிலிருந்து இராஜினாமாச் செய்ததும், நிலைமைகளை மேலும் மோசமாக்கியுள்ளது.இந்நிலையில், கட்சியை மீண்டும் சீரமைத்து, தங்கள் 9 ஆசனங்களையும் தக்க வைக்கவும், மேற்[illegible]ந்டு என்ன நடவடிக்கைகளை எடுப்பது என்பது தொடர்பாக[illegible] [illegible]த்த பீடாதிபதிகளின் ஆலோசனைகள் பெறப்பட வேண்டுமெ[illegible] தாம் விரும்பியதால், தனி யாகச் சென்று இரு பீடாதிபதிகளையும் [illegible] விரிவான பேச்சுக்களை நடாத்தியதாக, கட்சியின் தலைவர் ( [illegible]செயலாளர் தம்மலோக தேரர் மேலும் தெரிவித்தார்.

# தென்னிலங்கை மக்கள் மத்தியிலுள்ள இருள்மாயையை அகற்ற உதவுங்கள்

## -சமாதான நல்லெண்ணக் குழுவிடம் இளம்பரிதி வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

தென்னிலங்கையிலிருந்து வருகைதந்த 28 பேர் அடங்கிய சமாதானத்திற்கான நல்லிணக்கக் குழுவினர் நேற்று யாழ்.மாவட்டத்தின் பல பாகங்களிலும் சந்திப்புக்களை மேற்கொண்டதுடன் பல மதத்தலங்களுக்குச் சென்று வழிபாடுகளையும் நடாத்தியுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து மாலை 6.00 மணியளவில் யாழ்.மாவட்ட அரசியல்துறைச் செயலகதத்திற்கு விஜயம் செய்த அவர்கள் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதியுடன் சுமார் இரண்டு மணித்தியாலங்கள் சமகால அரசியல்நிலைப்பாடு தொடர்பாகவும் இடைக்கால நிர்வாக வரைவு தொடர்பாகவும் தங்களுக்கு இருக்கின்ற சந்தேகங்களைக் கேட்டு அறிந்து கொண்டதுடன்,தமிழீழவிடுதலைப் போராட்டம் தொடர்பான பூரண தெளிவினையும் தாம் அறிந்து கொண்டதாகவும், தென்னிலங்கை மக்களுக்கு இதனைத் தெரிவிக்கவுள்ளதாகவும் கூறினார்.

தென்னிலங்கை மக்கள் மத்தியில் உள்ள தற்காலிக இருள்மாயையினை அகற்றி ஒளி கொடுக்க நீங்[illegible] வவேண்டுமென அரசியல் [illegible]ப பொறுப்பாளர் கூறியதாக ஏற்று அதனை நிறைவேற்றப் பாடுபடுவோம் எனவும் அவர்கள் குறிப்பி[illegible]டனர்.

சௌமிய நிதியத்தின் தலைவர் தலைமை[illegible]யில் இக்குழுவினர் விஜயம் செ[illegible]திருந்தனர்.

# முதியோர்,சிறுவர் தினநிகழ்வுகள்; வடமராட்சி கிழக்கில் ஏற்பாடு

முதியோர் மற்றும் சிறுவர் தின விழா இன்று வடமராட்சி கிழக்கு உடுத்துறை மாகாவித்தியாலயத்தில வெகுசிறப்பாக நடைபெறவுள்ளது.

இன்று காலை 11.00 மணிக்கு உடுத்துறை மகாவித்தியாலயத்தில் நடைபெறும் இந்நிகழ்வு மருதங்கேணி உதவி அரச அதிபர் ரி.ஜெயசீலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் சிறுவர் முதியோர் தினத்தை ஒட்டிப் பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட கவிதை, கட்டுரைப் போட்டிகளில் பங்குபற்றி வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வும் விருந்தினர் உரை, சிறப்புரை என்பனவற்றுடன் முதியோர் கௌரவிப்பு நிகழ்வும் அதனைத் தொடர்ந்து கலை நிகழ்வுகளும் நடைபெறவுள்ளது. (லோ.தீ)

# மிருசுவிலில் பாரிய முகாமமைக்க சிறிலங்காப் படையினர் முயற்சி!

(தென்மராட்சி)

எழுதுமட்டுவாள், மிருசுவில பகுதியை மையப்படுத்திப் பாரிய படைமுகாம் ஒன்றை அமைக்க பலாலியிலுள்ள சிறிலங்காப் படைத் தலைமையகம் முடிவுசெய்துள்ளதாகத் தெரியவருகிறது.

இதேவேளை கொடிகாமம் கோயிலாமனை சிறிலங்காப் படைமுகாம் தற்பொழுது அகற்றப்பட்டுக் கொண்டிருப்பதாக இப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இப்படை முகாமில் இருந்து கடந்த ஐந்து தினங்களாகப் படையினர் ஆயுத தளபாடங்களையும் முகாம் வதிவிடங்களையும் அகற்றி வருவதாகத் தெரியவருகிறது.

இம்முகாமில் இருந்த தளபாடங்கள் பிரதானசாலை மூலம் எழுதுமட்டுவாள், கரம்பகம், ஓட்டுவெளி போன்ற படைமுகாம்களுக்கு எடுத்துச் செல்லப்படுவதாகத் தெரியவருகிறது. ஆட்லறிகள், கனரக வாகனங்கள் இந்த முகாமில் இருந்து அகற்றப்பட்டுள்ளன. (28)

## புலிக...

அரசாங்கம் சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கும் முகமாகவே மாற்று யோசனையைத் தயாரித்துள்ளது. அதனை விடுதலைப்புலிகளிடம் அது விரைவில் சமர்ப்பிக்கும். ஆனால், தமிழீழ விடுதலைப்புலிகள் அதனை ஏற்றுக்கொள்வார்கள் என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும் என்று அவர் கூறினார்.

## அடையாளம்...

ஆர்.பி.றுவன் சந்திரசேகரவும் விசாரணை அதிகாரி எம். பெரோலும் குறித்த பொலிசாரை அடையாளங் காட்டியிருந்தனர்.

ஆணைக்குழு அதிகாரிகள் மீதான தாக்குதல் இடம்பெற்ற வேளையில் யாழ். பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றியிருந்த 46 பொலிசாரில் 44பேர் நேற்று முன்தினம் அடையாள அணிவகுப்பிற்கு உட்படுத்தப்பட்டிருந்தனர். அவர்களில் இரு பொலிசார். அடையாளங் காட்டப்பட்டிருந்தனர்.

அவ்வேளை சமூகமளித்திருக்காத எஞ்சிய இருபொலிசாரும் நேற்று அடையாள அணிவகுப்பிற்கு உட்படுத்தப்பட்டிருந்த வேளையில் ஒருவர் அடையாளங் காட்டப்பட்டிருந்தார். (27)

## இனந்...

முழுமையாக ஈடுபட்டிருந்தன. இன்றும் தேடுதல் பணிகள் இடம் பெறும் எனக் கூறப்படுகின்றது.

இதனிடையே தாக்குதலில் காயமடைந்து சிகிச்சைக்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த மற்றோர் மீனவரான செபஸ்தியாம்பிள்ளை ரஜீமன்(வயது19) சிகிச்சை பெற்று நேற்று வெளியேறினார்.

இதேவேளை கடந்த புதன் கிழமை அதிகாலை மணற்காட்டைச் சேர்ந்த மேற்படி இரு மீனவர்களும் மீன்பிடிக்கச் சென்றிருந்தவேளை அப்பகுதிக்கு வந்த மற்றோர் படகிலிருந்த இனந்தெரியாத நபர்களால் தாக்கப்பட்டிருந்ததும், அச்சம்பவத்தினில் ஒரு மீனவர் காயமடைந்த நிலையில் மற்றைய மீனவர் காணாமற்போயுமிருந்தார்.

தாக்குதல்களை நடாத்தியவர்களது மொழிப்பாவனையிலிருந்து அவர்கள் இந்திய மீனவர்களாக இருக்கலாமென உள்ளூர் மீனவர்களிடையே சந்தேகம் எழுப்பப்பட்டுள்ளது.

இந்நிலையில் காணாமற் போயுள்ள மீனவர் கடத்தப்பட் டாரா அல்லது கடலில் வீசப்பட்டாரா எனக் கேள்விகள் எழுந்துள்ளன. (27)

## அலுவலகம் மாற்றம்

தென்மராட்சிப் பிரதேச செயலகம், வரும் 18 ஆம் திகதி முதல் சாவகச்சேரி டச்சு றோட்டில் உள்ள கட்டடம் ஒன்றில் செயற்படவுள்ளது. அதேபோல் கொடிகாமம், புதிய பிரதேச செயலகப் பிரிவு அலுவலகம் அதே தினத்தில் கொடிகாமம் பருத்தித்துறைச் சாலையில் அமைந்துள்ள கட்டடம் ஒன்றில் இயங்க உள்ளது.(28)

## சிறிலங்கா...

தள்ளாடி இராணுவ முகாமில் மன்னார் மாவட்டத்தின் நிலைப்பாடுகள் தொடர்பாக ஆராயும் கூட்டம் ஒன்றிலும் கலந்து கொண்டார். (21)

## சிங்கள...

வடக்கு கிழக்கு சிங்கள அமைப்புடன் இணைந்து போராட்டங்களை நடத்தி வெற்றிகாணும் நிலையில் ஜே.வி.பி.யின் எந்தப் பாராளுமன்ற உறுப்பினர்களும் உதவாத நிலையில் தற்போது அரசியல் இலாபத்திற்காகஇவர்கள் முனைவதாக அவர் குற்றம் சாட்டியுள்ளார்

## மட்டு...

வாழைச்சேனை பொலிஸ் நிலையத்திலும், கல்லடிப் பாலத்தில் கைது செய்யப்பட்ட 8 பேரும் மாதத்தில் கடைசி ஞாயிற்றுக் கிழமை காத்தான்குடி பொலிஸ் நிலையத்திலும் ஆஜராக வேண்டும் என்றும் நிபந்தனை விதித்துள்ளது. மேன்முறையீட்டு நீதிமன்ற உத்தரவிற்கு அமைய மட்டக்களப்பு நீதவான் எம்.எச்.எம்.அஜ்மீர் பிணையில் செல்வதற்கான அனுமதியை வழங்கினார். வாழைச்சேனைப் பொலிசாரினால் கைது செய்யப்பட்ட இருவரையும் எதிர்வரும் டிசம்பர் மாதம் 14ஆம் திகதியும், காத்தான்குடிப்பொலிசாரால் கைது செய்யப்பட்ட 8 பேரையும் எதிர்வரும் 15ஆம் திகதியும் மீண்டும் நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டும் என்றும் நீதிபதி தனது உத்தரவில் குறிப்பிட்டுள்ளார். விடுதலையான 10 போராளிகளும், இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு பிரதிநிதிகளினால் நீதிமன்றம் முன்பாக பொறுப்பேற்கப்பட்டு விசேட பொலிஸ், இராணுவ பாதுகாப்புடன் அழைத்துச் செல்லப்பட்டு செங்கலடி - பதுளை வீதி, கொடுவாமடுப் பாலம் முன்னணி காவல் நிலையப் பிரதேசத்தில் வைத்து விடுதலைப் புலிகளின் பிராந்திய பொறுப்பாளர்களிடம் கையளிக்கப்பட்டனர். இவர்கள் நேற்று நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட இருந்ததையடுத்து மட்டக்களப்பு நகரிலும், நீதிமன்ற சுற்றாடலிலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது.

## சந்திரிகா...

மையாக அமுற்படுத்த முயற்சித்தால், சிறுபான்மைக் கட்சிகள் தங்களது பாராளுமன்றப் பிரதி நிதித்துவம் பாதிக்கப்படும் என்று குரலெழுப்பி வருவதால், புதிய தொரு திட்டத்தை அறிமுகம் செய்யாமல், வெஸ்ட்மினிஸ்டர் திட்டத்தில் சில அவசிய மாற்றங்கள் செய்து, அனைத்துக் கட்சிகளின் ஆதரவுடன் அப்புதிய திட்டத்தை அறிமுகம் செய்ய தான் விரும்புவதாகவும் அதற்கு இக்குழுவின் ஆலோசனையைக் கேட்டதாகவும் சனாதிபதி சந்திரிகா கூறியுள்ளார். இனப்பிரச்சினையால் பாதிப்படைந்த சில நாடுகளின் பாராளுமன்ற அமைப்பை ஆராயவே இக்குழு கொழும்பு வந்ததாக சனாதிபதி செயலகம் அறிவித்துள்ள போதிலும், தற்போதைய பாராளுமன்ற முறையை மாற்றியமைத்து, அரசியல் யாப்பில் தான் விரும்பிய திருத்தங்களை ராஜதந்திர ரீதியாக முன்னெடுப்பதற்கான ஆலோசனைக்காகவே சனாதிபதி இவர்களை அழைத்துள்ளதாக இரகசியத் தகவல்கள் கசிந்துள்ளன. 1978ம் ஆண்டு வெளியான அரசியல் யாப்பின்கீழ் உருவான தற்போதுள்ள தேர்தல் முறைமை, சிறிலங்காவில் ஒரு வலுவான அரசியற் சூழலை உருவாக்கவில்லையென்றும், எந்தக் கட்சியுமே ஒரு நிலையான கட்டமைப்புடன் கூடிய அரசாங்கத்தை அமைக்க, தற்போதைய தேர்தலமைப்பு இடமளிக்கவில்லை என்றும் எடுத்துக்கூறிய சனாதிபதி, தற்போதைய தேர்தல் விதி முறையின்படி, சிறிலங்காவில் தொங்கு பாராளுமன்றங்களே அனைத்துக் காலப்பகுதியிலும் உருவாகியுள்ளதாகக் கூறி, இது மக்களினது விருப்பத்தைப் பிரதிபலிக்க வில்லை என்பதைத்தான் உணர்வதனாலேயே இதில் மாற்றங்கள் கொண்டுவர அவசரப்படுவதாகவும் விளக்கமளித்தார். தொடர்ந்தும் கொழும்பில் தங்கியிருக்கும் இக்குழுவினர், தற்போதைய தேர்தல் முறைமையையும், பாராளுமன்ற அமைப்பையும் மிக விரிவாக ஆராய்ந்து சனாதிபதியுடன் மேலதிக மந்திராலோசனை நடத்துவார்கள் என்றும் தெரியவருகிறது.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 15 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.